சாதி ஒழிப்பே !

சமூக விடுதலை !!





# ஆதித்தமிழர் பேரவை

தமிழ்நாடு

# AATHITHAMIZHAR PERAVAI

TAMIL NADU

நாள் : 20-8-2011

பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி நண்பர்களான செய்தியாளர்களுக்கு "ஆதித்தமிழர் பேரவை "-யின் கனிவான வணக்கங்கள்

## பத்திரிக்கை செய்தி

1. ஆதித்தமிழர் பேரவை-ன் வரலாற்று ஆய்வின்படி முதல் விடுதலை போராட்ட வீரரும், நெல்லை நெற்கட்டான் செவ்வையல் பாளையத்தின் தலைவருமான ஒப்பில்லா மன்னன் "**ஒண்டிவீரன்**" நினைவு நாளான ஆகஸ்ட்-20 ஐ முதல் விடுதலை போராட்ட எழுச்சி நாளாகவும், "**ஒண்டிவீரனின்**" வீர வணக்க நினைவு நாளாகவும் கடைபிடிக்க வேண்டும் என அனைவரையும் கேட்டுக்கொள்வதோடு.

   ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட்-20 ஐ "**ஒண்டிவீரனின்**" நினைவு நாளாக போற்ற வேண்டும் என அருந்ததியர் சமூக மக்களை "**ஆதித்தமிழர் பேரவை**" கேட்டுக்கொள்கிறது.

2. 1755-ம் ஆண்டில் ஒப்பில்லா "**மன்னன் ஒண்டிவீரன்**" துவக்கிய போரை முதல் விடுதலைப் போர் என அரசு அங்கீகரித்து, அந்த போரையே முதல் விடுதலைப் போர், என அரசு அறிவித்திட வேண்டும், "**ஒண்டிவீரன் நினைவுநாளை அரசு விழாவாக**" அறிவிக்க வேண்டும் என தமிழக அரசை ஆதித்தமிழர் பேரவை கேட்டுக்கொள்கிறது.

3. ஒப்பில்லா "**மன்னன் ஒண்டிவீரனின்**" "**தேசப்பற்றையும்**" "**வீரத்தையும்**" "**தியாகத்தையும்**" பள்ளிப் பருவத்திலேயே எதிர்வரும் தலைமுறையினர் அறிந்து கொண்டு "**லஞ்சம்**" "**ஊழல்**" "**வன்முறை**" சாதிய ஏற்றத் தாழ்வற்ற சமூகம் உருவாகிட "**ஒண்டிவீரனின்**" வரலாற்றை பள்ளி பாடத்திட்டத்தில் கொண்டுவர வேண்டும் என தமிழக அரசை "**ஆதித்தமிழர் பேரவை**" கேட்டுக்கொள்கிறது.

4. அருந்ததியர் சமூகத்தில் பிறந்த "**ஒப்பில்லா மன்னன் ஒண்டிவீரனின்**" "**தியாகத்தையும்**" "**வீரத்தையும்**" "**தேசப்பற்றையும்**" போற்றுகின்ற வகையில், நெல்லையில் அரசு அமைக்க இருக்கின்ற மணிமண்டபத்தில் "**வீர வாளோடு குதிரையில் அமர்ந்தபடி உள்ள பிரம்மாண்டமான முழு உருவ சிலை**"-யையும் உடனே அமைத்திட அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டு, அதனுடைய கட்டுமான பணிகளை விரைந்து முடித்து அதன் திறப்பு நிகழ்வை உடனடியாக நடத்திட வேண்டும் என தமிழக அரசை "**ஆதித்தமிழர் பேரவை**" கேட்டுக்கொள்கிறது.

ஒடுக்கப்பட்டோர் விடுதலைப்பணியில்

20-8-2011

(நிறுவனர்)


தலைமையகம் : அ – 7, சக்தி அடுக்ககம், மாவீரர் நகர், வடவள்ளி, கோவை – 641 041.

பேசி : 0422 - 2424721, 94430 - 84642 மின்னஞ்சல் : adhiyamaanperavai@gmail.com

www.aathithamizharperavai.com